# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 160/46 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/46 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின் மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

சனாதிபதியின் அலுவலகம்,
நுவரெலியா, 1975 ஏப்பிறல் 19.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

#### ஒழுங்குவிதி

எழுத்திலான வேறெந்தச் சட்டத்திலும் எது எவ்விதமிருப்பினும், இதனோடுள்ள அட்டவணையின் I ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டினசபை ஒவ்வொன்றினதும் அலுவல்களின் நிருவாகம், 1975 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து இந்த ஒழுங்குவிதி எவ்வளவு காலத்துக்கு வலுவிலிருக்கின்றதோ, அவ்வளவு காலத்துக்கு, அவ்வளவு காலத்திற்கு மட்டுமே, அவ்வட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களில் ஒவ்வொருவருக்கும் உரித்தாக்கப்படல் வேண்டும்; அத்துடன், அதற்கிணங்க, அத்தகைய ஒவ்வொரு பட்டினசபையின் அலுவல்களின் நிருவாகம் உரித்தாக்கப்பட்டுள்ள அத்தகைய ஆட்களில் ஒவ்வொருவரும், மேற்கூறப்பட்டுள்ள காலத்தின்போது, பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தினால் அல்லது வேறெந்த எழுத்திலான சட்டத்தினாலும் ஒரு பட்டினசபைக்கும் அதன் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளனவும் அவர்கள்மீது விதிக்கப்பட்டுள்ளனவுமான தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

#### அட்டவணை

| நிரை I | | நிரை II |
|---|---|---|
| தங்கொட்டுவைப் பட்டினசபை | .. | வருசஹன்னதிகே மேவின் ஜோசெப் அந்தோனி பர்னாந்து |
| வென்னப்புவப் பட்டினசபை | .. | நொயெல் இங்ஸ்லி திசநாயக்க |
| மஹாரகமைப் பட்டினசபை | .. | டொன் டயனீசியஸ் ஹேமச்சந்திரா சூரியாராச்சி |
| எல்பிட்டிய பட்டினசபை | .. | ஜஸ்ரின் தயசேன கெப்பிரியகம |


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.